மாலை மணி

திராவிடர் தமிழ்த் தினசரி ★ ஆசிரியர் : கே. ஜி. இராதாமணாளன்

Regd. No. 5438
Phone: 4502
காலைப் பதிப்பு
விலை அரை அணா

மாலை 4 | சென்னை 14-7-54 | மணி 24

வாழ்வின் ஒளி விளக்கு தி. மு. கழகம்

சிவஞானம் "ஏழுகடுக்காய்" வைத்தியர்!

பாட்டின் முதலும் முடிவும் பல்லவிதான்!

மல்லிகை பறிக்க குனிந்தும், பழம் பறிக்க நிமிர்ந்தும் ஆகவேண்டும்!

டில்லியுடன் போராடியே சித்தூர் சிக்கலைத் தீர்க்கமுடியும்!

திராவிடநாடு — நமது பிறப்புரிமை

சித்தூர் மாநாட்டில் அறிஞர் அண்ணா

புதுவைப் பகுதியினைத் தமிழகத்துடன் சேர்க்கும் பிரச்னை ஒரு பக்கம், நாஞ்சில் தமிழ்ப் பகுதி பற்றிபோராட்டம் இன்னொரு புறம், இலங்கை வாழ் தமிழ் மக்களின் இடர்களையும், இனனல்களையும், தீர்த்திடும் வேலை மற்றோர் பக்கம், இவைகளுடன் சித்தூர் பிரச்னை பற்றியும் தி. மு. கழகம் கவனித்து வருகிறது. இத்தனை பிரச்னைகளுக்கும் பரிகாரம் தேடி வருகிறது தி. மு. கழகம்—என்று, 11-7-54ல் பொதட்டூர் பேட்டையில் நடைபெற்ற தி. மு. க. அரசியல் மாநாட்டில் பேசுகையில் அறிஞர் அண்ணா குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது :

மாநாட்டின் சிறப்பு

இரு நாட்களாக இங்கே சித்தூர் மாவட்ட தி, மு. க. மாநாடுகள் நடைபெற்றன.

இந்த மாவட்டத்திலே தி, மு. க. மாநாடுகள் நடத்த வேண்டுமென்று முதன் முதலில் நண்பர்கள் என்னிடம்தெரிவித்தபோது நான் முதலில் கொஞ்சம் தயங்கத்தான் தயங்கினேன்.

இந்த மாவட்டத்திலே கழகப் பிரசாரத்தைப் போதிய அளவு செய்து, மக்களிடையே நம் கொள்கைகளைப் பரப்பிய பின்னர், நாமும் மக்களின் மனநிலையை நன்கு அறிந்த பின்னரே இந்த மாநாடு கூட்டுவது நலம் என்று கருதியதுதான், எனது தயக்கத்திற்குக் காரணமாகும்.

நமது கழகத்திற்கு இந்த வட்டத்தில் ஆதரவு இருக்கின்றது. மக்களிடையே நல்ல ஆர்வம் ஏற்பட்டுள்ளது என்பதை உணர்கிறேன். இந்த வட்டத் தோழர்கள் இப்பகுதியில் மாற்றார் சிலர் ஆந்திர மக்களிடையேயும் மனமாச்சரியங்களைத் தூண்டிவருகின்றனர் என்றும், அதுபற்றி தக்கதொரு தெளிவினை ஏற்படுத்திடவேண்டும் என்றும், அதற்காகவேனும் ஒரு மாநாடு கூட்

கூறினர்.

குறிப்பாக, இப்பொதட்டூரில் உள்ள சில ஆர்வமிக்க நண்பர்கள் இதுபற்றி என்னிடம் மிகவும் வற்புறுத்தினர். நமக்கு நல்ல ஆதரவு இருப்பதாகவும் எடுத்துக்கூறினர். அவர்களுடைய ஆர்வத்தையும், அவர்கட்கு ஆதரவு காட்டியவர்களையும் நான்பெரிதும் பாராட்டுகிறேன்.

அந்த ஆர்வமும் ஆதரவும் ஒன்று சேர்ந்து, இன்று இங்கே மாநாடு சிறப்பாக நடந்தேறி வருகிறது. இதற்காக இம்மாவட்டத்தாருக்கும் இதனைக் கூட்டிய

நண்பர்கட்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம் மாநாடுகளைக் கூட்டுவதிலே ஏற்பட்ட பற்பல இடுக்கண்களை நான் அறிவேன். இதில் பொறுப்பேற்ற நண்பர் சிலருக்கு, உண்மையிலேயே கைப்பொறுப்பு ஏற்பட்டால் நான் ஆச்சரியப்படுவதற்கில்லை. இருந்தும் இத்தகைய பணியில் ஈடுபட்ட அவர்களின் ஆர்வம் பாராட்டுதற்குரியதுதான்.

நேற்று நடந்த சமுதாய மாநாட்டிலே சமுதாயத்தின் சீர்கேடுகளைப் பற்றி பலரும் விளக்கினார்கள். அவற்றிலிருந்து நமது சமுதாயம் ஜாதி பேதங்களால் எத்துணை பிளவுகளாகி பேதப்பட்டு பின் தங்கியுள்ளது என்பதும் மத மூட நம்பிக்கைகள் நம்மைப் பீடித்து பிற்போக்குத்தன்மையிலே நம்மை வாழ வைத்திருக்கின்றன என்பதும் நன்கு விளங்கின.

இத்தகைய சாதிபேதங்களைக் சாடினாலன்றி, மத மாசுகளைத் துடைத்தாலன்றி, மூடநம்பிக்கைகளை முறியடித்தாலன்றி நமது சமுதாயம் முன்னேற முடியாது என்பதையும் மக்கள் நன்கு புரிந்து கொண்டிருப்பர்

இரண்டாம் நாள், அரசியல் மாநாடான இன்று மாநாட்டுத் தலைவரும் மற்றவரும் தி. மு. கழகத்தின் அரசியல் கருத்துகளை நன்கு விளக்கினார்கள். குறிப்பாக சித்தூர் மாவட்டத்தின் தமிழ்ப் பகுதிகளை, ஆந்திர நாட்டுடன் இணைத்திருப்பதை மாற்றி, மீட்டு மீண்டும் தமிழ்ப் பகுதியுடன் இணைப்பதுகுறித்து மிக விளக்கமாகப் பேசியுள்ளனர்.

சித்தூர் பிரச்னை

இவ்வட்டாரப் பகுதி மக்களிடையே, நம்மைப்பற்றி, மிக முக்கியமாகக் கேட்கப்படும் கேள்வி சித்தூர் மாவட்ட தமிழ்ப்பகுதிகளைப் பற்றியதுதான் சித்தூர் மாவட்ட தமிழ்ப் பகுதிகளை ஆந்திரத்திலிருந்து பிரித்து, எப்படி தமிழ்ப் பகுதியுடன் சேர்க்கப் போகிறார்கள் இதற்காக என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள் ? எப்படி சேர்க்கப் போகிறார்கள்? என்பதுபற்றியெல்லாம் மக்கள் சந்

(3ம் பக்கம் பார்க்க)

ஆந்திரப் பகுதியில் பகுத்தறிவு வீரர்கள்!

கொள்கையை விளக்கி—முன்னணி வீரர்களின் இலட்சிய முழக்கம்

சித்தூர் மாவட்ட தி. மு. கழக மாநாடு நிகழ்ச்சிகள்

சென்னை, ஜூலை, 14—

சித்தூர் மாவட்ட தி. மு. கழக சமூக சீர்திருத்த மாநாடும் அரசியல் மாநாடும் முறையே 10, 11 தேதிகளில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டுக்கு மாவட்டங்களிலிருந்து ஏராளமான மக்கள் வந்திருந்தனர். மாநாடு இரண்டு நாட்கள் மிகச்சிறப்பாக நடைபெற்றது

சமூகச் சீர்திருத்த மாநாடு

...னம்பலம் தலைமை தாங்கிய மாநாட்டை தோழர் கே. ஆர் இராமசாமி அவர்கள் ஆரம்பித்து வைத்து நமது இயக்கத்தில் அவருக்குள்ள பங்கையும் நாடகம், சினிமா மூலம் அவர் இயக்கத் தொண்டு செய்து வருவதைப் பற்றியும் மிக விரிவாய் பேசியதுடன், திராவிட நாட்டு விடுதலைக்கு தன் ஆயுட்காலம் முழுமையும் செலவு செய்து அதற்கான எல்லா வழி

...னார் பின்னர் இடைவேளைக்குப்பிறகு மாநாடு மாலை 4மணிக்குத் துவங்கியது. தோழர் ஆர். எஸ் பாண்டியன், தோழர் சி. பி. சிற்றரசு தோழர் என். வி நடராஜன், தோழியர் சத்தியவாணிமுத்து பூங்கோதை சி. வி. எம். அண்ணாமலை, அருள்மொழி இரா நெடுஞ்செழியன் ஆகியவர்கள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்கள். மாநாடு ஆரம்பத்தில் இசைச் செல்வி ஜி. கஸ்தூரி அவர்களின் இன்னிசை சுமார் 2-மணி நேரம் நடைபெற்றது.

அரசியல் மாநாடு

மறுநாள் காலை 10 மணிக்கு அரசியல்மாநாடு இசைச் செல்வி ஜி. கஸ்தூரி இன்னிசையுடன் ஆரம்பமாயிற்று. தலைவர்,

மாலைமணி

சென்னை 14—7—54

ஏழை எரிமலையாகட்டும்!

“சார்!”

“என்னப்பா, யார் வேண்டும்?”

“மானேஜரைப் பார்க்க வேண்டும், சார்!”

“என்ன செய்தி?”

“பத்திரிகை வினியோகிக்க சொந்த சைக்கிள் உள்ள ஆட்கள் தேவை—என்று உங்கள் பத்திரிகையில் விளம்பரம் வந்திருக்கிறது”

“ஆமாம்!”

“என்னிடம் சைக்கிள் இருக்கிறது! அந்த வேலைக்கு என்னை எடுத்துக் கொள்ளுங்கள் சார்!”

“சொந்த சைக்கிளிருக்கிறதா?”

“சொந்தமாக இல்லை! என் நண்பனுடையது! அவன் பத்துமணிக்கு மேல்தான் வேலைக்குப் போவான்! எட்டு மணிக்குள் கடைகளுக்குப் பத்திரிகையைப் போட்டு விட்டு, அவனிடம் சைகிளைத் தந்து விடுவேன்! நானும் அவனும் ஒரே ஊர், இப்பொழுது இங்கே ஒரே வீட்டில்தான் குடியிருக்கிறோம், சார்!”

“அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் வந்துவிட முடியுமா?”

“ஓ! நாலரை மணிக்கே வந்து விடுகிறேன், சார்!”

“தினம் ஒன்னரைமணி நேரந்தான் வேலையிருக்கும்! மாதம் சம்பளம் ரூபாய் பதினைந்து!”

“சரி, சார்!”

“டெப்பாசிட், பத்துருபாய் கட்ட வேண்டும்!”

“டெப்பாசிட்டா? பத்துருபாயா? நான் ஏழை, சார்! இண்டர்மிடியட் வரைக்கும் படித்திருக்கிறேன்! இரண்டு வருஷமா வேலை தேடிக்கிட்டு இருக்கிறேன், கிடைக்க வில்லை, சார்! இந்த வேலை கிடைத்தாலாவது சிறிது உபாகரமாக இருக்கும்! நான் யோக்கியமானவன், திறமையா வேலை செய்வேன் என்பதற்காக நற்சாட்சிப் பத்திரங்கள் வைத்திருக்கிறேன்! என்னை நம்புங்கள், சார்! டெப்பாசிட் இல்லாமல்......”என்று கெஞ்சும் குரலில் பரிதாபமாகக் கேட்டபடி, அந்த வாலிபன் மேஜையைப் பிடித்துக் கொண்டு நின்றான.

இது கற்பனை அல்ல! வேறெந்த அலுவலகத்திலோ நிகழ்ந்ததுமல்ல! நம் மாலைமணி அலுவலகத்திலேயே நடந்தது! காலைப் பத்திரிகை வினியோகிக்க சொந்த சைக்கிள் உள்ள ஆட்கள் தேவை என்ற விளம்பரம், ஒரு வாரக் காலமாக மாலைமணியில் விட்டு விட்டு வந்துகொண்டிருக்கிறது. அந்தப் பதினைந்து ரூபாய் வேலைக்கு, தினந்தினம் இருபது முப்பது பேர் வந்து போகிறார்கள்! அவர்களில் ஒருவர் இருவரைத் தவிர, மற்றவர்களால் முன்பணமாகப் பத்து ரூபாய் கட்ட முடியவில்லை! அவ்வளவு ஏழ்மை! எஸ். எஸ். எல் சி. தேறியவர்களும் இண்டர்மீடியட் படித்தவர்களும் அந்த வேலைக்கு வருகிறார்கள், முன் பணம் கட்ட முடியாமல் எப்படியாவது வேலை கொடுங்கள் என்று கெஞ்சி நிற்கிறார்கள்—எவ்வளவு பரிதாபம் இது? இத்தகைய கேவல நிலையில் நிற்கவா, அவர்கள் படித்தார்கள்? பதினைந்து ரூபாய் வேலை—அதற்கு நூற்றுக்கணக்கான பேர் போட்டி! அவ்வளவு வறுமை, அத்தகைய வேலையில்லாத் திண்டாட்டம்—இந்த நாட்டிலே!

ஐந்தாண்டு திட்டம், அதற்குக் கோடிக் கணக்கிலே பணம்! அந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்து இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாகிறது. இந்தத் திட்டத்தினால் நாட்டிலே பெரியதொரு மாற்றம் ஏற்படும்—அவல நிலைமையிலுள்ள மக்கள் அமர வாழ்வு பெறுவார்கள்—ரஷியா போன்ற முற்போக்கு நாடுகளையும் தலைநிமிர்ந்து பெருமையோடு பார்க்கும் அளவிற்கு, இந்தியாவில் சுகமும் சுபிட்சமும் போட்டியிட்டுப் பொங்கி வழியும்—என்றெல்லாம் காங்கிரஸ் தலைவர்கள் வீராப்போடு மேடை மீது விளக்கம் தந்தார்கள் அல்லவா?

இந்த இரண்டரை ஆண்டு காலத்தில் நாடு எப்படியிருக்கிறது? திட்டம் அமுல் நடத்தப்படுவதற்கு முன்னர், இருந்தபடியே இன்றும் இருக்கிறதா? அல்லது ஒருபடி முன்னேறியிருக்கிறதா? இரண்டுமில்லை! இரண்டரை ஆண்டுகட்குமுன்னர் இருந்ததைவிட, இன்று பஞ்சமும் பட்டினியும் அதிகமாகியிருக்கிறது! வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகிவிட்டது! இலட்சக்கணக்கான இளைஞர்கள், “வேலை! வேலை!” என்று தெருத்தெருவாகச் சுற்றவும், அந்தச் சங்கடத்தைக் காணச் சகியாத பெற்றோர்கள் தேம்பவுமான பரிதாபக் காட்சிகள், நாளுக்கு நாள் அதிகரித்தபடியே உள்ளன!

எதிர்க் கட்சிக்காரர்களின் வீணான குற்றச்சாட்டுகள் இவை என்று யாரும் கூறமுடியாது. காரணம், இந்திய அரசாங்கத்தின் திட்ட மந்திரி தோழர் ஜி. எல். நந்தா அவர்களே இதை வெளியிட்டிருக்கிறார். வேலை தேடித் தரும் நிலையங்கள் தந்துள்ள புள்ளி விவரங்கள், அவருக்கே கவலையை உண்டாக்கிவிட்டிருக்கிறதாம்! பாவம்!

ஐந்தாண்டு திட்டம் அமுல் நடந்துகொண்டிருக்கும் இந்த இரண்டரை ஆண்டு காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் எப்படியிருக்கிறது? அதை வெட்டவெளிச்சமாக்க, தோழர் நந்தா வானொலியில் பேசுகையில் தந்த புள்ளி விவரங்களை, இதோ கீழே தருகிறோம்:—

1952-ம் ஆண்டு மார்ச்சு மாதம் முடிந்த மூன்று மாதங்களில், 3,30,000 பேர் தங்கள் பெயர்களை, வேலை தேடித்தரும் நிலையங்களில் பதிவு செய்துகொண்டார்கள்.

1953 மார்ச்சு—4,29,000 பேர் பதிவு செய்துகொண்டார்கள்.

1954 மார்ச்சு மத்தியில்—5,33,000 பேர் பதிவு செய்துகொண்டார்கள்.

அதாவது இந்த ஐந்தாண்டு திட்டம் அமுலுக்கு வரும் போது, 3 லட்சம் பேர் பதிவு செய்து கொண்டார்கள், தங்களுக்கு வேலை வேண்டுமென்று.

அந்தத் திட்டம் ஜரூராக வேலை செய்ய ஆரம்பமான இந்த இரண்டரை ஆண்டு காலத்தில் மூன்று இலட்சம், ஐந்து இலட்சமாகப் பெருகிவிட்டது!

வேலை தேடித்தரும் நிலையம் என்று ஒன்றிருப்பதாகவே, வேலைக்குத் திண்டாடும் அனேகருக்குத் தெரியாது! அந்த நிலையங்களில் பதிவு செய்துகொள்வதினால், வேலை யொன்றும் கிடைத்துவிடப் போவதில்லை என்று கருதி பதிவு செய்துகொள்ளாமலேயே பரதவிப்போரின் எண்ணிக்கை லட்சக் கணக்கில்!

வேலைக்காகச் சுற்றியலைவோரின் எண்ணிக்கையோ வளர்ந்தபடியே இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் பாடசாலையைவிட்டு, லட்சக்கணக்கான எஸ். எஸ். எல். சி.க்களும், கலலூரிகளை விட்டு பதினாயிரக்கணக்கான இண்டர்மீடியட், பீ. ஏ, எம். ஏ., பட்டதாரிகளும் வெளியே வந்துகொண்டிருக்கிறார்கள்.

இவர்களெல்லாம் பட்டினியால் சாகாமலிருக்க அரசாங்கம் என்ன செய்யப்போகிறது? இவர்களுக்கெல்லாம் எங்கே இருந்து வேலை தரப் போகிறது? அரசாங்கம் இதற்கான திட்டம்என்ன தயாரித்திருக்கிறது?

நாட்டின் எதிர் காலத்தையே மிகவும் பாதிக்கக் கூடிய இந்த வேலையில்லாப் பிரச்னையை உடனடியாக கவனிக்க, வழி வகை தேடாமல், தேசிய திட்டக் கமிஷன் என்றும், அதற்கு முப்பத்தெட்டு துறைகளில் ஆராய்ச்சி என்றும், அதற்கான வல்லுநர்களுக்குக் கோடிக் கணக்கிலே பணத்தைக் கொட்டிக் கொண்டு செல்வதில் என்ன பயன்?

ஏதேதோ பிகாக்கரிக்கும் நேருக்கு, இந்தச் சாதாரண விஷயம் புரியாதது ஏன்? புரிகிறது என்றால, அதற்குப் பரிகாரம் இன்னமும் தேட வில்லையே, ஏன? அதற்கான திறமை அவரிடம் இல்லையா? அன்றி, ஏழை எரிமலையாகட்டும், நிலைமை தன்னால் சரியாகி விடும் என்று எண்ணுகிறாரா? நேரு அப்படி நினைத்தாலும் நினைக்கா விட்டாலும், கேரிடப் போவதென்னமோ அதுதான்!

ஆந்திர பகுதியில்:

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டர் படைகுழமாநாட்டுக் கொடியை ஏற்றி வைத்தார். வரவேற்புக் குழுத் தலைவர் கே. டி. கே. சாமி அவர்கள் மாநாட்டுப்பிரதிநிதிகளை வரவேற்று பேசினார். பின்னர், தோழர் இராம அரங்கண்ணல் மாநாட்டைத்துவக்கி வைத்து அரியதோர் சொற்பொழி வாற்றினார்.

மாநாட்டுக்கு தோழர் எ எல். சி, கிருஷ்ணசாமி அவர்களைத் தலைமை வகிக்கும்படி பொன்னம்பலம், பாண்டியன். வி, முனுசாமி, வரதாரசன் ரஷீத், ஆகியோர்கள் கேட்டுக் கொள்ள நீண்ட கைதட்டுதலுக்கிடையே மாநாட்டுக்குத் தலைமை வகித்து தோழர் கிருஷ்ணசாமி பேசினார். இரா. நெடுஞ்செழியன் பேச்சுக்குப் பிறகு மாநாடு இடைவேளை உணவுக்கு கலைந்து பிறகு பகல 4 மணிக்கு கூடியது. மாநாட்டுத் தீர்மானங்களைப்பற்றி தோழர்கள் ஏ. கோவிந்தசாமி கே. ஏ. மதியழகன், நாகர் கோவில் ஜான், கேசவன், பொன்னம்பலம் சி. பி சிற்றரசு, கே. எம், கண்ணபிரான வி, ராமசாமி, சத்தியவாணி முத்து முதலியவர்கள் பேசிய பிறகு நமது பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் தற்கால அரசியல் நிலை குறித்து மிக அழகாகப் பேசினார் பின்னர் மாநாடு தலைவர் முடிவுரைக்குபிறகுஇனிதுமுடிந்தது.

இரண்டு நாட்களிலும் தோழர் எம் ஜி ராமச்சந்திரன் அவர்களின் குழுவினால் இன்பககனவும நடிப்புக் கலைஞர் எஸ் எஸ் ராஜேந்திரன் அவர்கள் குழுவினால சந்திரமோகன நாடகமும் நடைபெற்றது நாடகத்திற்கு ஏராளமான மக்கள வந்திருந்தனர்.

திருச்சி, ஜூலை 13—

திருச்சி ஜில்லாவில பூமிதான இயக்கதின் சார்பாக சுற்றுப் பிரயாணம் செய்வதாக இருந்த பிரதமா காமராசர் குடியாத்தம் தேர்தலை முன்னிட்டு இம்மாதம் கடைசி அல்லது அடுத்த மாதம் முதல்வாரத்தில் சுற்றுப் பிரயாணம் செய்வதென முடிவு செய்திருக்கிறாராம்,

வாழ்வின் ஒளிவிளக்கு...

1-ம் பக்கத் தொடர்ச்சி

தேகமும் அச்சமும் கலந்த கண்களுடன் நம்மை நோக்கிக் கவனிக்கின்றனர்.

சித்தூர் பகுதியினால் தமிழ் மக்களுக்கும், ஆந்திர மக்களுக்கும் மனமாச்சரியத்தை அதிகப்படுத்தப்போகின்றார்களா? அல்லது குறைக்கப் போகின்றார்களா? இந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் தேட இவர்களால் முடியுமா? ஆற்றல் வருமா? என்ன வழி சொல்லப்போகிறார்கள்? என்றெல்லாம் மக்களிடையே கேள்விகள் கேட்கப்படுகின்றன. இது பற்றிய பேச்சுகள் பேசப்படுகின்றன. இத்தகைய உணர்ச்சிகள் மேலோங்கியுள்ளன.

திராவிட முன்னேற்றக் கழகம் சித்தூர் பிரச்னையைத் தனது பிரச்னைகளில் ஒன்றாகக் கவனித்துத்தான் வருகின்றது, ஆனால் இது ஒன்று தான் அதனுடைய பிரச்சினையாக ஒரே ஒரு குறிப்பிட்ட பிரச்சினையாக இல்லை என்பதையும் தெரிவித்து விடுகிறேன்.

தி. மு. க. ஒளிவிளக்கு!

இருட்டில் கீழே விழுந்த சாமானைத் தேட, விளக்கு அவசியமாகிறது தொலைந்த பொருளைத் இருட்டில் தேடிட விளக்கு ஒளிதருகிறது. விழுந்த சாமான் கிடைத்த பிறகு விளக்கின் ஒளி தேவையில்லை. சில சமயம் விளக்கு அணைக்கப்படும். ஆனால் பல நேரங்களில், விளக்கு வீடு முழுதும் ஒளி தருவதற்காக அணைக்கப்படுவதில்லை. வீட்டிற்கு ஒளிதரும் ஒளி விளக்காக அந்த விளக்கு அமையும்— உபயோகப்படும்.

அதுபோலவே, சித்தூர் பிரச்சினையில் வழிகாட்ட. பரிகாரம் தேட, விடுதலைபெற்றிட, தி. மு. க. ஒளி விளக்காகப் பயன்படும். அத்துடன் நின்று விடாது. வீட்டிற்கு ஒளி தரும் விளக்கைப் போல, திராவிடர் வாழ்விற்கு ஒளிதரும் ஒளி விளக்காகத் தொடர்ந்து ஒளி வீசிவரும் தி. மு. க. இந்த மகத்தான—முக்கியமுமான பணியில் ஈடுபட்டுள்ளது.

காரணத்திற்காத் தோன்றிய கழகமுமல்ல!

சாதாரணமாக ஒரு கட்சி சித்தூர் பிரச்னைக்காக மட்டுமே ஏற்பட்டதாக இருந்தால் சித்தூர் பிரச்னை தீர்ந்துவிட்டதும், அதற்கு வேலையில்லை, அத்துடன் கலைக்கப்படலாம். ஆனால் தி. மு, க. அப்படிப்பட்டதா? இல்லவே இல்லை.

தி. மு. கழகம், சித்தூர் பிரச்சினை தோன்றாத முன்னமே, சித்தூர் பிரச்சினை எழக்காரணமான ஆந்திரப் பிரிவினை ஏற்படாத காலத்திலேயே, ஆந்திர நாடு பற்றி நிச்சயம் ஏற்படாத போதே, ஆந்திரகேசரி ஆந்திரப் பிரிவினை பற்றிக் கனவுகண்டு கொண்டிருந்த அந்தக் காலத்திலேயே ஏற்பட்டதாகும்.

தி. மு. க. சித்தூர் பிரச்னைக்காக மட்டும் ஏற்பட்ட கழகமல்ல. அதற்கும் முன்னரே பல பிரச்சினைகளுக்காக ஏற்பட்டதாகும். அதன் வேலை சித்தூர் போராட்டத்தைக் கவனித்து, வெற்றி காண்பதோடு முடிந்து விடாது. தீர்ந்தும் விடாது, தொடரும், மேலும் பல பிரச்னை கவனிக்க, பரிகாரம் தேடிட.

சித்தூர் பிரச்னையைக் கவனிக்கும் இதே நேரத்தில் தி. மு. க. தமிழகத்தின் திராவிடத்தின் பல்வேறு பிரச்னைகளையும் கவனித்தாக வேண்டும்—கவனித்து வருகிறது-

புதுவை—நாஞ்சில்—போராட்டம்

புதுவை பகுதியினைத் தமிழகத்துடன் சேர்க்கும் பிரச்னை ஒரு பக்கம். நாஞ்சில் தமிழ் பகுதி பற்றி போராட்டம் இன்னொரு புறம். இலங்கை வாழ் தமிழ் மக்களின் இடர்களையும். இன்னல்களையும் தீர்த்திடும் வேலை மற்றோர் பக்கம். இவைகளுடன் சித்தூர் பிரச்சினை பற்றியும் தி முகழகம் கவனித்து வருகிறது. இத்தனை பிரச்சினைகளுக்கும் பரிகாரம் தேடி வருகிறது தி. மு. கழகம்.

இவ்வளவு பிரச்னைகட்கும் என்ன பரிகாரம் இருக்கிறது? எப்படித் தேடப் போகிறீர்கள்? என்று கேட்கக் கூடும்?

சென்ற இருநாட்களாக, இங்கு பேசிய அத்தனை பேச்சாளர்களும், எந்தப் பிரச்சினையைப் பேசிய போதிலும், எத்தகைய விளக்கங்கள், வழி, வகைகள் கூறிய போதிலும், முடிவில் அத்தனை பேச்சாளர்களும் ஒரே ஒரு குறிப்பிட்ட வழியைத் திரும்பத் திரும்பக் கூறியதைக் கண்டிருப்பீர்கள்.

எப்படி ஒரு பாட்டைப் பாடும் பாடகர், பல்லவியில் ஆரம்பித்து, அநுபல்லவி, சரணம் என்று தொடர்ந்து, மீண்டும் பல்லவி பாடி முடிக்கிறாரோ, அதுபோலவே, தோழர்கள் அனைவரும் தமது பேச்சின் முடிவில் 'டில்லி' டில்லி' என்று முடித்திருப்பதைக் காணலாம்.

நமது பிரச்சினைகள் அனைத்திற்கும் பரிகாரம் தேட வேண்டிய இடம் கேட்க வேண்டிய இடம், டில்லிதான். அந்த டில்லியினின்றும் நாம் தனியாக பிரிவதும் தான்.

பிரச்சினை தீர புது வழி!

தோழர் ம. பொ. சிவஞானம் அவர்கள் சித்தூர் பிரச்னை தீர ஆந்திர சர்க்காருடன், அறப்போர் தொடுப்பதுதான் வழி என்று கூறுவார்.

கம்யூனிஸ்டுகள், ஆந்திர கம்யூனிஸ்டு கட்சிப் பிரதிநிதிகளும். தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகளும் ஒரு அறையில் கூடிக்கலந்து பேசி ஒரு முடிவு செய்து அறிக்கை விட்டால் போதும் என்று கூறுவர்.

ஆனால் தி. மு. கழகம் மட்டும் சித்தூர் பிரச்னைக்கு மட்டுமல்ல, மற்ற புதுவை நாஞ்சில் பகுதிகட்கும் இலங்கை தமிழர்கட்கும் உள்ள இடர் நீங்க, நீக்கப்பட ஒரே ஒரு பரிகாரம் கூறுகிறது. டில்லி ஆதிக்கவெறி என்பதே அந்தப் பரிகாரம். திராவிடநாடு தனி நாடாக வேண்டும் என்பது தான் அது. அதுதான் நமது ஒரே பல்லவி,

இந்த நமது ஆதி பல்லவியை ஒப்புக் கொண்டு, ஒத்துழைக்கும் மற்ற எந்தக் கட்சியுடனும் நாம் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம்.

மற்ற கட்சிகள் அனைத்தும் எந்த பிரச்னைகட்கும் இங்கேயே பரிகார தேடுகின்றன, பரிகாரம் கிடைக்கும் [illegible] கூறுகின்றன. ஆனால் நம[illegible] மட்டும் இந்தப் பிரச்[illegible]கள் தீர டில்லியையும், அதனிடமிருந்து திராவிடம் தனியாகப் பிரிவதையுமே பரிகாரம் என்று கூறுகிறது. அதற்காகப் பாடுபட்டும் வருகின்றது,

எந்தக் காரியத்தையும் செய்திட, சாதித்திட அது அதற்கென்று ஒரு தனி வழி இருக்கத்தான் இருக்கின்றது? அதுபோலவே எந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடினாலும் அது அதற்கு உரிய வழிவகைகளைக் கண்டறிந்து தேடவேண்டும், செயலாற்றவும் வேண்டியதாகிறது.

தேங்காய் பறிக்க வேண்டுமானால், தென்னைமீது ஏறினால் தானே முடியும்! தொறடு கொண்டு பறித்திட முடியுமா? மாங்கனி பறித்திட வேண்டுமானால் மரத்தின்மீது ஏறியும் பறிக்கலாம்; தொறடு கொண்டும் பறிக்கலாம். வாழைக்கனி பெற்றிட மரத்தின்மீது ஏறவும் முடியாது, தோறடு கொண்டும் பறிக்க முடியாது; வாழையைக் குலையுடன் வெட்டினால்தானே முடியும்? மல்லிகை பறிக்க குனிந்துதான் ஆக வேண்டும். பழம் பறித்திட நிமிர்ந்துதான் பறிக்க வேண்டும். இதைப்போலவே, பிரச்சினைகட்குப் பரிகாரம் தேடிடும் முறையும், வழியும், வகையும் மாறுபடும், வேறுபடும் என்பதை உணர்ந்து, அந்தந்தப் பிரச்சினைகட்கு என்று உள்ள தனித்தனி முறைப்படி காரியமாற்றவேண்டும்.

இதே முறையில்தான் சித்தூர் பிரச்சினைக்கு ஒரு தனி முறை தேவைப்படுகிறது. புதுவைக்கு வேறு போர்முறை அவசியமாகிறது. நாஞ்சில் பகுதியில் மற்றொருவிதப் போராட்டம் தேவைப்படலாம். இலங்கை பற்றி புதுமுறை வகுத்திடும் நிலையும் வரலாம். எதற்கு எந்த முறை தேவை, எந்த வழி போனால் நல்லது—காரியம் நடக்கும் என்பதை எண்ணி நடந்திடவேண்டியது முக்கியமாகும்.

சிவஞானம் கடுக்காய் வைத்தியர்!

ஒரு காலத்தில் ஒரு வைத்தியன் இருந்தானாம், அவன் எந்த வகை வியாதிக்கும் ஏழு கடுக்காய் அரைத்துத் தருவானாம். வயிற்றுவலியா? இந்தா ஏழு கடுக்காய்! காய்ச்சலா? பிடி. இதோ ஏழு கடுக்காய். கை கால் பிடிப்பா? அதற்கும் அதே ஏழு கடுக்காய்! என்று எந்த நோய்க்கும் ஒரே ஏழு கடுக்காய், சூரணம் தந்து வந்தானாம். அந்த வைத்தியனிடம் ஒருநாள் ஒரு வண்ணான் தன்னுடைய கழுதை காணாமல் போய் விட்டது என்று கூறினானும் அதைக் கேட்டதும் வைத்தியன் கழுதைக்கும் ஏதோ நோய்தான் என்ற நினைப்பில் இதோ ஏழு கடுக்காய் என்று தந்தானாம்! வேடிக்கையான கதை இது ஆனால் நல்ல அர்த்தமுள்ளது.

இந்த ஏழு கடுக்காய் வைத்தியனைப் போலத்தானே தோழர் ம. பொ. சிவஞானமும் எதற்கெடுத்தாலும் அறப்போர் அறப்போர் என்று பேசி வருகிறார். தூண்டி விடுகிறார்? சித்தூர் பிரச்சினைக்கும் அதே கடுக்காய் சூரணம் அறப்போர் என்று பேசுவதும் தூண்[illegible] வி[illegible]ம்.

நோய் கேற்ற மருத்துவம் வேண்டும்-!

நாங்கள் தி. மு. கழகத்தவர் சில நோய்க்கு கடுக்காய் சூரணம் தேவை யென்கிறோம். சில நோய்கட்கு பச்சிலையும், வேறு வேறு மருந்துகளும், சிலவற்றிற்கு அறுவைதான் சரியென்றும், சில நோய்கள் நீங்க ஒரு வேளைப்பட்டினியே மருந்தாகும் என்று கூறுகிறோம். நோய்க்கேற்றபடி நோயின் அடிப்படையை அறிந்து மருந்து தரும் வேலைதான் எங்கள் வேலையாகும். அதுதான் நல்ல வைத்தியத்திற்கும் அடையாளமாகும் பொருத்தமுமாகும். அதைவிட்டு எதற்கெடுத்தாலும் ஏழு கடுக்காய் கொடுத்தால் நோயுந் தீராது. மேலும் மேலுந் தொல்லைகள் தானே பெருகும்? பெருக முடியும்?

நான் உதாரணத்திற்காகக் கூறுகிறேன். இந்தப் பந்தல் நல்ல முறையில் அடர்த்தியாகக் கீற்றுகள் அமைத்துப்போடப்பட்டிருந்தால், சிறிதுநேரம் பெய்த மழைக்காக மக்கள் கலைந்திருக்கத் தேவையில்லையே? அதைப் போலவே தகரக்கொட்டகையிலோ, நல்ல கட்டிடத்திலோ, நாம் இருந்தால் மழை நம்மை என்ன செய்யும்?

மழைக்காக நாம் கொஞ்சம் கலைந்தோம், என்றால், நாமெல்லாரும் பயந்தவர்கள் என்று பொருள்? இல்லையே? பந்தல் அமைப்பு அப்படி? அதுதானே காரணம்? பந்தல் சரிவர அமைந்திருந்தால் — அமைக்கப்பட்டிருந்தால், கலையவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாதல்லவா! அதுபோலத்தான் ஆந்திரம் தனியாக அமைந்தபோதே—பிரிக்கப்பட்டபோதே டில்லி அரசாங்கம் இது பற்றி நியாயமாகவும், நேர்மையாகவும் நடந்து கொண்டிருந்தால் இன்று சித்தூர் தமிழ்ப் பகுதிப் பற்றிய பிரச்னை எழுந்திருக்க முடியுமா? முடியாதல்லவா?

போர்முனையிலும் புத்திசாலித்தனம் வேண்டும்!

ஆந்திரரும் ஆந்திர கேசரி பிரகாசமும் தமது வீரதீரத்தால் போரிட்டா, சித்தூர் தமிழ்ப்பகுதிகளை ஆந்திரத்துடன் இணைத்துக் கொண்டனர்? கிடையாதே!

ஆந்திரம் பிரியும் வரையில் பிரகாசம் சென்னை நகரையும் ஏன் அதற்கு மேலும் ஆந்திரப் பகுதியில் சேர்க்கப்பட வேண்டும் என்று உரிமை கொண்டாடினார்! கடந்த பொதுத் தேர்தலிலும் அதனைப் பிரச்சினையாக பேசிச் சொந்தம் கொண்டாடினாரே! ஆனால் அதே ஆந்திர கேசரியார் சென்னையைக் கேட்டால் ஆந்திரமே கிடைக்காது காரியம் முடியாது என்ற நிலை ஏற்பட்டதும் சென்னைப் பற்றி பேசாமல் இருந்துவிட வில்லையா அதுபோல சித்தூர் பகுதி பற்றியும் டெல்லி சர்க்கார் நடந்து கொண்டிருந்தால் இன்றைய நிலை ஏற்பட்டே இருக்காது.

ஆந்திர மாகாணம் தனியே பிரிய வேண்டும்—பிரிக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தோழர் பொட்டி சிராமுலு பல நாள் உண்ணா விரத மிருந்து உயிர் நீத்தார். இதன் விளைவாக ஆந்திரத்தைத் தனியே

4-ம் பக்கம் பார்க்க

வாழ்வின் ஒளி விளக்கு...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிக்கச் சம்மதிக்க டெல்லி சர்க்கார் ஒரு நீதிபதியை அனுப்பி ஆந்திரப் பிரிவினை பற்றி விசாரித்தனர். அந்த நீதிபதி விசாரித்து ஒரு அறிக்கை வெளியிட்டார். டெல்லி சர்க்கார் அறிக்கையைச் சரிவர கவனிக்காது அவரது அறிக்கையில் தகராறுக்கு உரிய பிரதேசங்கள் என்று குறிப்பிட்ட சித்தூர் மாவட்டம் முழுவதையும், பெல்லாரி மாவட்டத்தையும் ஆந்திர மாகாண மாக்கினர்.

ஆனால் மைசூரைச் சேர்ந்த கன்னட மக்கள் தமது மொழி மக்கள் நிறைந்த பெல்லாரி மாவட்டம் ஆந்திரத்துடன் இணைக்கப்படுவதை எதிர்த்துக் கிளர்ச்சிசெய்து, டெல்லி சர்க்காருடன் போராடி வெற்றிகண்டனர். இதனால், பெல்லாரி மைசூருடன் இணைக்கப்பட்டது.

தகராறுக்கு உரிய பகுதி என்று குறிப்பிடப்பட்ட, தமிழர்கள் நிறைந்த சித்தூர் மாவட்டம் முழுவதையும் எல்லைக் கமிஷன் வைத்து விசாரணை செய்து, ஆந்திர, தமிழ் எல்லைகளை வரையறுக்க டெல்லி சர்க்கார் முனையவில்லை.

எய்தவனைவிட்டு அம்பை நோவதா

டெல்லி அரசாங்கம் தன் போக்கில் சித்தூர் தமிழ்ப் பகுதிகளையும் ஆந்திரத்துடன் இணைத்து விட்டது, இதுதான் நடந்தது, நியாயமற்ற முறையில் தமிழ்ப்பகுதிகளை ஆந்திரத்துடன் சேர்த்த டில்லி சர்க்காரைத் தானே நாம் தட்டிக்கேட்க வேண்டும்? அவர்களுடன் வாதாடித்தானே வெற்றி காண வேண்டும், அது தானே வழி? அதற்கான திட்டம்? சிக்கல் டெல்லியில் தானே ஏற்பட்டு இருக்கிறது.

போராடவேண்டிய இடம் டில்லிதான்!

எனவே சித்தூர் தமிழ்ப் பகுதிகளை நாம் திரும்பப் பெற போராட வேண்டிய இடம் கர்நூல் அல்ல! டெல்லி என்பதை முதலில் உணர வேண்டும். டெல்லியுடன் நிலைமையை விளக்க அமைதியாக ஆனால்உறுதியுடன் தெளிவாகவும் திட்டமாகவும்—தீர்மானமாகவும் வாதாடி, போராடி சித்தூர் தமிழ்ப் பகுதிகளை மீட்க வேண்டும்.

இதை விட்டு ஆந்திர நண்பர்களுடன் மோதிடுவதால் என்ன நன்மை பிறக்கும்? அவர்கள் தாமாகவா, சித்தூரை எடுத்துக் கொண்டார்கள். டெல்லி தானே ஆந்திரத்துடன் சித்தூரைச் சேர்த்து விட்டது? எய்தவன் இருக்க அம்பை நோகலாமா? செய்தவன் எங்கோ இருக்க இங்கே இருக்கும் வேறு நபருடன் வம்புக்குப் போவது நல்லதா? நன்மைதரும் வேலை யாகுமா? நியாயமற்ற முறையிலே, நேர்மை தவறி டெல்லி சர்க்கார் நடந்து விட்டது. டெல்லி சர்க்காரைத் தட்டிக்கேட்டிடும் திராணி வேண்டும் அதனுடன் போராடும் திறமை தேவை. அப்போதுதான் சித்தூர் பிரச்னை தீரும்—தீர்க்க முடியும். அதைவிட்டு, ஆந்திர நண்பர்களுடன் மோதிடும் செயலும் ஒரு சிறிதும் அர்த்தமுள்ளதல்ல! ஆற்றல் நிறைந்ததுமல்ல! இத்தகைய விவாதங்கள் அனைத்தும் கவைக்குதவாதவைகளே

சித்தூர் பிரச்னை தீர தனி முறை தேவை என்பதை டெல்லியுடன் வாதாடும் முறை-போராடும் வழி வகை வகுக்க வேண்டும். சித்தூர் தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்துடன் சேர்த்திடும் அதிகாரம் இங்கே இல்லை—ஆந்திர நண்பர்களிடமும் கிடையாது. அந்த அதிகாரம் சென்னை இராயபுரம் தி. மு. க, தலைமை நிலையத்திலும் இல்லை சிவஞானத்தின் வீடான இருசப்ப கிராமணித் தெருவிலும் கிடையாது! அந்த அதிகாரம் குவிந்து கிடக்கும் இடம் டெல்லி—டெல்லி சர்க்கார்!

சித்தூர் தமிழ்ப் பகுதிகளைப் பற்றிய தீர்ப்பு—நியாயம் பிறக்க வேண்டிய இடம் எது? டில்லியா, கர்நூலா? இது பற்றிய சட்டம் இயற்றிடும் இடம் டெல்லி தானே? கர்நூலால் முடியுமா? முடியாது,

வீண் முயற்சி!

சித்தூர் பிரச்சினைக்காகநானோ நண்பர்கள் விநாயகமோ, சிவஞானமோ ஆந்திரத்தில் அறப்போர் தொடுத்து, ஆந்திர நாட்டுச் சிறையில் அடைபடுவதால் என்ன ஆகிவிடும்? ஆந்திர நாட்டுச் சிறையில் மூன்று அறைகள் பூர்த்தியாகும்.அவ்வளவுதானே? பிரச்சினை தீர—தீர்க்க டெல்லி தானே வரவேண்டும்.

ஆந்திர நண்பர்களாகப் பார்த்து அதன் முதல் அமைச்சர் பிரகாசமே விரும்பி, சித்தூர் தமிழ்ப் பகுதிகளைத் திருப்பி நம்மிடமே கொடுக்க முன்வந்தாலும் முடியாதே! அந்த அதிகாரம் அங்கே தானே—டெல்லியில்தானே இருக்கின்றது?

இந்த நிலையில், சித்தூர் தமிழ் பகுதிகளை மீண்டும் தமிழ் நாட்டுடன்இணைத்திட, நாம் டெல்லி ஆட்சியாளரைத் தட்டிக் கேட்டிடும் திராணியை பெறவேண்டும். அதற்கான திறமையையும், வழிவகைகளையும் மேற்கொண்டாக வேண்டும்.

சித்தூர் தமிழ்ப் பகுதியை ஆந்திரத்துடன் சேர்த்தது தவறு—நியாயமற்றது, அதனைப் பிரித்து மீண்டும் சென்னையுடன் சேர்த்திடவேண்டும் என்று டில்லியைக் கேட்டு, அதன் பின் டெல்லியுடன் போராடவேண்டும். அதற்குக் குறுக்கே சென்னை சர்க்கார் வந்தால் அதனுடன் போராடவேண்டும் இரண்டும் சம்மதித்தது, ஆந்திரர் சம்மதிக்கவில்லையென்றால் தான்ஆந்திர நண்பர்களிடம் நாம்அறப்போர் தொடுக்கவேண்டும்.

முன்னுக்குப்பின் முரண்!

எடுத்த எடுப்பில், செய்தவனைத் தவிர்த்து, மற்றவருடன் போரிடப் போவது போல தோழர் சிவஞானம் போன்றோர் அண்மையில் எமது போராட்டம் நேருவுடனும் அல்ல. காமராஜருடனும் அல்ல' பிரகாசத்துடன் தான் என்று கூறியது இருக்கின்றது? இது எப்படி நியாயமாகும்?

நேருவைக் கேட்காமல நேரு

பரமக்குடி அருகே பொன் கலந்த மண்

பரமகுடி, ஜுலை 12—

பரமக்குடியைச் சார்ந்த மேலச்சருகுளம் கிராமத்தில் கந்தசாமி தேவர் என்பவர் ஓடு செய்வதற்காக மண்ணைவெட்டி எடுத்தாராம். அந்த மண்ணில் தங்கப் பொடிகள் கலந்திருப்பதை அறிந்து அவ்வட்ட தாசில்தாருக்கு இந்த தகவலை அறிவித்ததும். தாசில்தார் ஸ்தலத்திற்கு வந்து பார்த்து அம்மண்ணில் ஒரு பகுதியை பரிசோதனைக்காக அரசாங்க ஆராய்ச்சி நிலயத்திற்கு அனுப்பி வைத்துள்ளாராம்—அந்த நிலப்பகுதியைப் போலீசார் இப்பொழுது காவல்காத்து வருகின்றனா.

தமிழ்ப் பகுதிகளை ஆந்திரநாட்டிலிருந்து பிரிக்க முடியும் எனவேதான் தி. மு, கழகம் இப்பிரச்னைதீர டெல்லி சார்காரைக் கேட்க வேண்டும்—மறுத்தால் அவர்களுடன் அறப்போர் தொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றது.

ஆந்திர நாட்டுடன் சித்தூர் தமிழ் பகுதிகள் நியாயமற்ற முறையிலே சேர்க்கப்பட்டதற்கு டெல்லி ஆட்சிப் பீடமே காரணம்.ஆந்திரர் அல்லர் என்பதை உணர்ந்து, டெல்லியுடன் தொடர்பு கொள்ள வேண்டும். அதுதான் நமது முதல் வேலை.

ஆந்திர நண்பர்களும் சித்தூர் பகுதிகளைத் தமது நாட்டுடன் சேர்த்திடும் முயற்சியில் ஈடுபட்டுத்தான் வந்துள்ளனர். முப்பது, முப்பத்தைந்து ஆண்டுகட்கு முன்னரே அவர்கள் இதற்காகச் சூது முறையில் காரிய மாற்றி யிருக்கின்றனர் என்பது இப்போது தான் வெளிப்படுகின்றது. தமிழர்களையும் பழைய சென்சஸ்படி தெலுங்கர் என்று பதிவு செய்துள்ளனராம், தோழர் விநயகம் அவர்களையே விநயக ரெட்டியார் என்று குறித்து தெலுங்கர் என்பதாகத் தீர்மானித்துள்ளனராம்.

தமிழர்கள் ஏமாளிகளல்ல!

முப்பது ஆண்டுகட்கு முன்னர் நடந்த இந்த சூதானசூழ்ச்சி காரியங்களைத் தமிழர்கள் கவனிக்கவில்லை யென்பதால் தமிழ கள் ஏமாளிகள் என்பதல்ல பொருள். தமிழர்கள் அன்று வெள்ளையனை விரட்டும் பணியிலும் வேறு பல பிரச்னைகளிலும் ஈடுபட்டிருந்தனர்' ஆந்திரர் நடத்திய சூதுக்களைகவனிக்கவில்லை.

அன்று கவனிக்க வில்லை என்பதற்காக இன்று உரிமையை இழக்க முடியுமா? முடியாது. அன்றிருந்த தலைவர்கள் பல்வேறு பிரச்சினை காரணமாக இச் சூதுகளைக் கவனிக்காமல் இருந்திருக்கிறார்கள். என்னைப் போன்றவர்கள், முப்பது ஆண்டுகட்கு முன்னர் துள்ளி விளையாடும் பருவத்தினராகத் தானே இருந்தோம்?

எப்போதோ ஒரு சிறிது ஏமாந்தோம் என்பதற்காக எங்கள், நாட்டை எங்கள் தமிழ்ப் பகுதிகளை டெல்லி சர்க்கார் ஆந்திரத்துடன் சேர்த்து அதை ஆந்திரருக்கு தானம் செய்ததை எப்படி நாம் விட்டுக் கொடுத்திட முடியும்? முடியவே முடியாது. டெல்லியை தட்டிக் கேட்டே திர வேண்டும்!

(தொடர்ச்சி நாளைவரும்)

விற்பனையாகிறது!

அண்ணாவின் அன்புப்படையல்

ஜூலை 15

இருவர்ண அட்டை:

விலை அணா 4

எல்லா பத்திரிகைக் கடைகளிலும் கிடைக்கும்.

பாகிஸ்தான் கொள்ளைக்காரன்

11-ஒட்டகங்கள் மீட்கப்பட்டன

ஜெயப்பூர், ஜுலை 13—

பாகிஸ்தானிலிருந்து வந்த பிரபல கொள்ளைக்காரனைஷேர்கானின் கோஷடியுடன் ராஜஸ்தான் போலீசார் கடுமையான சண்டையிடவேண்டியதாயிற்று, ஆறுமணி நேரத்திற்குப் பிறகு கொள்ளைக்காரனின் நண்பன் சகத் சிங் என்பவனைத் தான் போலீசார் கைது செய்ய முடிந்தது. அவனிடமிருந்து ஒரு ரிவால்வரும் வெடி மருந்துகளும் கைப்பற்றப்பட்டன. களவாடப்பட்ட 11 ஒட்டகங்களும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டன,

க்ஷவரக் கடைகளின் முன் மறியல்

சங்கத்தின் முடிவு

சென்னை, ஜுலை. 14—

சென்னை க்ஷவரத் தொழிலாளர் சங்கத்தின் முடிவுப்படி எல்லாக் கடைக்காரர்களும் செவ்வாய்க்கிழமை கடைகளை மூடி விடுகிறார்கள். சிலர் வேண்டுமென்றே சங்கத்தில் சேராமல் செவ்வாய்க்கிழமையிலும் கடைகளைத் திறந்து வைத்திருப்பதை நேற்று கூடிய க்ஷவர தொழிலாளர் ஜெனரல்பாடிக் கூட்டத்தில் கண்டிக்கப்பட்டது. ஒன்றுபட்ட சக்தியைக்குலைக்கும் எண்ணத்துடன் நடந்து கொள்ளும் தொழிலாளர்களின் கடைகளின் முன் மறியல் நடத்துவதெனவும் அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது,

அறிவிப்பு

மதுரையில் நமது 'மாலைமணி' விற்பனையாளர் முகவரி:

A. சுப்பையா
நியூஸ் ஏஜண்ட்,
24, பாரதி ரோடு,
மதுரை

விளம்பர விகிதம்

1 பத்தி 1 அங்குலம் ரூ. 5-00
ஒப்பந்த விளம்பரம்
1 பத்தி 1 அங்குலம் ரூ. 4.0.0
நீடித்த விளம்பரங்களுக்குச் சலுகை உண்டு.

திருமதி, எம் ராஜம் அவர்களுக்குச் சொந்தமான மெர்கண்டைல் அச்சகத்தில் திரு டி. பி சுப்ரமணியம் அவர்களால் அச்சிடப்பட்டு 2145, முத்துமாரிச் செட்டி தெரு சென்னையில் வெளியிடப்பட்டது.